**ஊடகச்செய்தி 15.12.2021**

## புகையிலை நிறுவனத்தின் தலையீட்டுச் சுட்டெண்

புகையிலை நிறுவனத்தின் உற்பத்தியானது, தற்போதும் சர்வதேச ரீதியாக வருடாந்தம் 08 மில்லியன் மக்களை கொலை செய்கிறது. அது தவிர குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் நாடுகளில் புகையிலை பாவனையினால் பல்வேறு தொற்றா நோய் நிலைமைகள் ஏற்படுவதுடன், தொற்றா நோய்கள் ஏற்பட்டிருக்கும் அதிகமானோருக்கு கொவிட் 19 தொற்று மற்றும் அதனால் மரணம் அதிகரிக்கும் அச்சுறுத்தலும் அதிகமாகும்.

ஏறக்குறைய அனைத்து ஆசிய நாடுகளும் உலக சுகாதார அமைப்பின் (WHO) புகையிலை கட்டுப்பாடு தொடர்பான கட்டமைப்பு மாநாட்டில் (FCTC) பங்குதாரர்களாக உள்ளன. FCTC கட்டுரை 5.3, புதிய மற்றும் தற்போதுள்ள புகையிலை கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் உயிர் காக்கும் கொள்கைகளுக்கு சவால் விடும், புகையிலை தொழிற்துறையின் உத்திகளில் இருந்து விழிப்புணர்வு மற்றும் பொது சுகாதாரத்தை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது. இருப்பினும், விதி 5.3 செயல்படுத்தல் வழிகாட்டுதல்கள் பல அரசாங்கங்களால் பெரும்பாலும் பயன்படுத்தப்படாமல் உள்ளன, சுகாதாரம் அல்லாத கொள்கைகள் குறிப்பாக புகையிலை தொழில் குறுக்கீட்டால் பாதிக்கப்படக்கூடியவை.

விதி 5.3 இல் காணப்படும் வழிகாட்டலின் மூலம் புகையிலை நிறுவனம் வரப்பிரசாதங்களை பெற்றுக்கொள்வதற்காக, அரசாங்கத்திற்கு அழுத்தங்களை வழங்கக்கூடிய சில சிக்கல்கள் இருப்பதை கோவிட்-19 உணர்த்தியுள்ளது. குறைந்த வளம் கொண்ட நாடுகள் குறிப்பாக புகையிலைத் தொழிலால் பாதிக்கப்படக்கூடியவை. மேலும் கோவிட் 19 இனை வாய்ப்பாக பயன்படுத்தி மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருத்துவமனைப் பொருட்கள் நன்கொடைகள் போன்ற சமூகப் பொறுப்பு (CSR) செயல்பாடுகளை தொழில்துறையால் மேற்கொள்ளப்பட்டதுடன், புகையிலை நிறுவனத்திற்கான வரிச் சலுகைகள் மற்றும் வரி அதிகரிப்பு போன்ற ஒழுங்குமுறை நடவடிக்கைகளைத் தடுத்து தமக்கான சலுகைகளையும் பெற்றுக்கொள்கின்றது.

இந்த 3வது ஆசிய புகையிலை தொழில் குறுக்கீடு குறியீட்டு அறிக்கை, 19 நாடுகளில் 5.3 மற்றும் அதன் வழிகாட்டுதல்களின் அமுலாக்கத்தின் அளவை அளவிடுகிறது. பங்களாதேஷ், புருனே, கம்போடியா, சீனா, இந்தியா, இந்தோனேசியா, ஜப்பான், கொரியா, லாவோ பிடிஆர், மலேசியா, மாலைத்தீவுகள், மியன்மார், நேபாளம், பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், இலங்கை, தாய்லாந்து மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளுக்கு மேலதிகமாக மங்கோலியாவும் இந்நாடுகளின் பட்டியலில் இணைகிறது.

ஒவ்வொரு நாட்டிலும் உள்ள பங்காளர்கள் ஆரம்பக் கணக்கெடுப்பை நடத்தி, ஜனவரி 2020 முதல் மார்ச் 2021 வரை பொதுவில் கிடைக்கும் சான்றுகளின் அடிப்படையில் தேசிய அறிக்கையைத் தயாரித்தனர். நிலைபேறான தன்மையைக் கருத்திற் கொண்டு, புகையிலை தொழில் குறுக்கீட்டின் சுட்டெண் மற்றும் தீவிரத்தன்மை உட்பட குறிப்பிட்ட அளவைக் கண்டறிந்து அளவிடுவதற்கு, கேள்வித்தாள் மற்றும் மதிப்பெண் முறை பயன்படுத்தப்பட்டது. இந்த சம்பவங்களைத் தீர்ப்பதற்கான அரசாங்க நடவடிக்கைகள் அல்லது பதில்கள் அறிக்கை, பொதுவில் கிடைக்கும் தரவை மட்டுமே பயன்படுத்துவதால், பகுப்பாய்வு குறைவாக உள்ளது. ஆயினும்கூட, இந்த மதிப்பீடுகள் அரசாங்கங்கள் மேம்படுத்தக்கூடிய குறிப்பிட்ட கொள்கை இடைவெளிகளைக் கண்டறிய உதவக்கூடும்.

**FIGURE 1:** TOBACCO INDUSTRY INTERFERENCE IN ASIAN COUNTRIES

Figure 1 shows the overall level of tobacco industry interference in 19 countries in Asia in 2021. Lower scores mean better implementation of Article 5.3 and its guidelines.





**FIGURE 2:** INDUSTRY PARTICIPATION IN POLICY DEVELOPMENT





**FIGURE 3:** INDUSTRY CSR ACTIVITIES





**FIGURE 4:** BENEFITS TO THE TOBACCO INDUSTRY




**FIGURE 5:** FORMS OF UNNECESSARY INTERACTIONS





**FIGURE 6:** TRANSPARENCY





**FIGURE 7:** CONFLICTS OF INTEREST






**FIGURE 8:** PREVENTIVE MEASURES





**முடிவு மற்றும் பரிந்துரைகள்**

புகையிலை தொழில்த் துறையினரின் 2020 மதிப்பெண்களுடன் ஒப்பிடுகையில், ஐந்து (5) நாடுகள் ஓரளவு மேம்பட்டுள்ளன, நான்கு (4) நாடுகள் மாறாமல் இருந்தன, அதே நேரத்தில் ஒன்பது (9) நாடுகள் 2021ஆம் ஆண்டு தரவரிசையில் சரிவைக் காட்டின. இரண்டு விடயங்கள் இந்த விளைவிற்கு காரணியாக அமைந்திருக்கலாம்.

புகையிலைத் தொழிலின் அதிக ஆக்ரோஷமான தந்திரங்கள், கோவிட்-19 தொற்றுநோய்களின் போது அரசாங்கத்தின் பொருளாதார வீழ்ச்சியை பயன்படுத்திக் கொண்டமை மற்றும் புகையிலை தொழில்துறையின் செயல்பாடுகளைக் கண்காணித்து பொது மக்களை இயல்புநிலைக்கு மாற்றுவதற்கான, விழிப்புணர்வையும் ஏற்படுத்துவதற்கும், புகையிலை தொழில்துறையின் தலையீட்டை திறம்பட எதிர்ப்பதற்கும் முழு அரசாங்க அணுகுமுறையும் அவசியமாகும். சுகாதாரம் மற்றும் சுகாதாரம் அல்லாத அமைச்சகங்கள் மற்றும் துறைகள் இரண்டும் புகையிலை தொழில் தலையீட்டால் பெரும்பாலும் பாதிக்கப்படக்கூடியவை, குறிப்பாக கோவிட்-19 தொற்றுநோய் சூழலில், வெற்றிகரமான புகையிலை கட்டுப்பாடு மற்றும் மேம்படுத்தப்பட்ட சுகாதார விளைவுகளுக்கு இது முக்கியமானது என்பதால், அனைத்து துறையினரும் கட்டுரை 5.3 ஐ செயல்படுத்த தங்கள் முயற்சிகளை வலுப்படுத்த வேண்டும்.

**FIGURE 9:** PROGRESS IN COUNTERING TOBACCO INDUSTRY INTERFERENCE




புகையிலை தொழிற்துறையின் குறுக்கீடுகளை எதிர்கொள்வதில் முன்னேற்றம் காணும் வகையில், இலங்கையின் நிலைப்பாடு, அதன் முன்னைய சூழ்நிலைகளுடன் ஒப்பிடுகையில், இந்த விடயத்தில் முன்னேற்றம் அடைவதற்குப் பதிலாக, மோசமடைந்துள்ளது என்பது தெளிவாகிறது. நாட்டில் புகையிலை கட்டுப்பாடு வலுவிழந்து வருவதை இது எடுத்துக்காட்டுகிறது, இது விரைவாக தீர்க்கப்பட வேண்டும் மேலும் கட்டுப்படுத்த முடியாத சூழல் நிலைக்கு செல்லாமல் இருக்க வேண்டும்.

இந்த ஆவணப்படுத்தப்பட்ட சீரழிவுக்கு முக்கியக் காரணம், புகையிலைத் தொழிலில் அவற்றின் செயலில் குறுக்கீடுகள் படிப்படியாக அதிகரித்து வருவதாலும், அதன் விளைவாக, நடைமுறைப்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டு வழிமுறைகள் பலவீனமடைந்துள்ளன.

இந்த நிலைமையை மாற்றியமைக்க வேண்டும் எனின், அரசாங்கம் இதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். தனிநபர்கள், ஊடகங்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியன ஒரு செயலூக்கமான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் மற்றும் தற்போதைய நிலைமையை எவ்வாறு மேம்படுத்துவது என்பது குறித்த உரையாடலைத் தொடங்க முன்முயற்சி எடுக்க வேண்டும்.

நடைமுறைப்படுத்தலின் அளவீடாக இந்தக் குறிப்பிட்ட கருவி, கொள்கைகளில் மாற்றங்கள் மூலம் உருவாக்கப்பட வேண்டிய பகுதிகளைக் கண்டறிவதற்கான மிகச் சிறந்த முறையாகும்.

**மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம்**